# டிரினிடி மகளிர் கல்லூரி
# (கலை& அறிவியல்)
# நாமக்கல் – 637002.

## 2021 -2022 ஆம் கல்வியாண்டு (இரட்டைப் பருவம்)

## 21PTA08 – சமய இலக்கியங்கள்

வழங்கியவர்
முனைவர் சி. கோபியா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை.
http://www.trinitycollegenkl.edu.in/

# திருமந்திரம்

- திருமூலதேவநாயனாரின் திருமந்திரமாலை, **திருமந்திரம்** என்ற பெயரால் வழங்கப்படும்.
- சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக இடம்பெற்றுள்ளது.
- சைவ ஆகமங்களின் சாரமாகத் திகழும் இந்நூலை, தமிழில் எழுந்த சைவசமயஞ் சார்ந்த ஒரு கலைக்களஞ்சியம் என கூறலாம்.
- திருமந்திரம் ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது.
- ஒவ்வொரு பிரிவும் ஒரு 'தந்திரம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஒன்பது தந்திரங்களும், ஆகமங்கள் ஒன்பதின் சாரமாக அமைந்துள்ளன.
- ஆகமங்கள் 28, அவற்றுள் ஒன்பதின் சாரமாக 9 தந்திரங்கள் அமைந்துள்ளன.

# 9 தந்திரங்கள்

- காரணம்
- காமிகம்
- வீரம்
- சிந்தம்
- வாதுளம்
- வியாமளம்
- காலோத்தரம்
- சுப்பிரம்
- மகுடம்.

# வேத ஆகமச் சிறப்பு

- வேதம், ஆகமம் என்ற இரண்டு நூல்களைப் பற்றியும் திருமூலர் குறிப்பிடுகிறார்.
- இரண்டுமே இறைவனிடமிருந்து வந்தவை.
- வேதம் பொது; ஆகமம் சிறப்பு என்பதும் அவர் கருத்து
- ஆகமம் என்ற சொல்லுக்கு ‘வந்தது’ என்பது பொருள்.
- இச்சொல், சிவபெருமானிடமிருந்து இந்நூல்கள் வந்தன என்பதைக் குறிக்கிறது.
- ஆகமம் என்ற சொல்லை மற்றொரு விதமாகவும் பிரித்துப் பொருள் காண்கிறார்கள்.
- ஆ என்பது பாசம்; க என்பது பசு; ம என்பது பதி. எனவே இம்மூன்றையும் ஆகமம் கூறுகிறது.

# அரிய செய்திகள்

- திருமந்திரம் சைவ சமயத்திற்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமையாது, உலக மக்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்ம ஈடேற்றத்தையும், மருத்துவக் கூறுகளையும் எடுத்துரைக்கும் பொது நூலாக அமைந்துள்ளது.
- குழந்தைகள் குருடாய், ஊமையாய், முடமாய்ப் பிறப்பதற்குரிய காரண விளக்கம்.
- திருக்கோயில் வழிபாட்டின் இன்றியமையாமை.
- விரும்பியவாறு ஆண் அல்லது பெண் குழந்தை பெற்றுக் கொள்வதற்குரிய மூச்சுப்பயிற்சி முறை, (வியப்பாக உள்ளதா? திருமந்திரம் பாடலில் இவ்விவரம் தரப்பட்டுள்ளது: பாடல் எண்-482)

# அன்பே சிவம்

- மனிதர்கள் ஏனைய மனிதர்கள்பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

- உலகத்தில் தோன்றிய கடவுள் சார்புடைய மதங்களும், கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினைப் பெரிதும் போற்றியே உரைக்கின்றன.

- திருவள்ளுவர் முதலிய அறநூலாசிரியர்களும் அன்பின் சிறப்பையும், இன்றியமையாமையையும் எடுத்துரைத்துள்ளனர்.

- சைவர்களின் இறைவன் சிவன். அன்புதான் எங்கள் சிவன். சிவம் வேறு அன்பு வேறு என்பார் அறியாமை மிக்கவர்கள்.

- இரண்டும் ஒன்றே என்று உணரும் உணர்வில் இறைமைப் பேறு வாய்க்கும்.

## மனிதநேயப் பரிவு

- மனிதரின் உள்ளத்தில் இறைவன் குடி கொண்டுள்ளான்.

- மனிதர்கள் இறைவனின் நடமாடும் கோயில்கள், நடமாடும் கோயில்களாகிய மனிதர்க்கு ஒன்று கொடுப்பது இறைவனுக்குக் கொடுப்பதற்கு ஒப்பாகும்

# வாழ்வியல் உண்மைகள்

- இறைவனைச் சென்று அடைதற்கு உரிய எளிய வழி குருவை வழிபடுதலால் கிட்டும்.
- பிறன் மனை நோக்காத பேராண்மையை ஆடவர் பெறல் வேண்டும்.
- காக்கை தன் இனத்தைக் கூவி அழைத்துக் கலந்து உண்பது போல், சக மனிதர்களோடு கலந்து உண்ணல் வேண்டத்தக்கது.
- கற்றவர்களுக்கு மட்டுமே பேரின்பம் வாய்க்கும்.
- கேள்விச் செல்வமே மனிதர்களுக்கு உற்ற துணை. மிகுந்த காமமும் கள்ளுண்டலும் கீழோர் என்று அடையாளம் காட்டும்.

# திருமூலர்

- பாயிரப் பகுதியில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
- திருமூலர் பெரியபுராண நாயன்மார் வரிசையிலும் இடம் பெற்றுள்ளார்.
- இவர் வரலாற்றைப் பெரியபுராணமும் எடுத்துரைக்கிறது.
- வடநாட்டிலிருந்து தென்னாடு வந்த முனிவர் ஒருவர் மாடு மேய்க்கும் ஓர் இளைஞன் உடலில் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து மூலன் எனப் பெயர் பெற்றார்.
- திருவாவடுதுறையில் யோகத்தில் பலகாலம் இருந்து இத்திருமந்திரமாலையை உலகுக்கு வழங்கினார்.
- தமிழில் ஆகமங்களின் சாரங்களைத் தொகுத்தளிப்பதே அவர் வருகையின் நோக்கம் என்பது உறுதியாகிறது.

# நன்றி.

http://www.trinitycollegenkl.edu.in/